கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் ஞானம்
1கொரிந்தியர் 1:30

# ஞான ஒலி

இணைய வார இதழ்

www.newwisdomministries.com

ஞானம் 6 - ஒலி 10 | 05-03-2023



# ஐயோ...அது கரும்பா? கம்பா?



# ஆசைபட்டா மட்டும் போதுமா என்ன?

## தலையங்கம்

அருட்பணி. சைமன் பீட்டர்

ஞான ஒலி இணைய இதழின் வாசகப் பெருமக்களே உங்கள் அனைவரையும் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. இறையருளின் வல்லமையை ஒவ்வொரு நிமிடமும் நீங்கள் உணரவும், மனநிறைவையும், மகிழ்ச்சியையும் பெற நான் செபிக்கின்றேன்.

இத்தவக்காலத்தில் இறைவனின் அருமை பெருமைகளையும், நம்மோடு வாழும் அனைத்து உயிரினங்களின் பேருண்மைகளையும் அறிய நமக்கு மிகப்பெரிய வாய்ப்பு தரப்பட்டுள்ளது. தேடுகின்றவர்கள் கண்டடைவார்கள் என்ற இயேசு பெருமானின் வார்த்தைகள் உண்மையிலும் உண்மை.

ஆனால் தேடுகின்றவர்களின் தேடு பெருள் என்ன என்பதைப் பொறுத்தே அத்தேடலின் தரம் அமையும்.

கனியிருப்பக் காய் கவர்ந்தற்று, என்ற வள்ளுவப் பெருந்தகை கூறியதற்கேற்ப....நல்ல சுவையான, தரமான, மேன்மையானவற்றைத் தேர்ந்து கொள்வதே ஒருவரின் புத்திசாலித்தனத்தைக் காட்டும். அதைவிடுத்து கனியாத, கசப்பான, சுவையற்ற, சொத்தையான, தேவையற்றவற்றை தேடுவோர், விவரமறியாதவர், பக்குவமடையாதவர் என்ற ஊரார் கேலி பேசும் பொருளாக உலகம் நம்மை எள்ளி நகையாடுவர் என்பதை உண்மையையும் நாம் அறிய வேண்டும்.

நாம் அயிரம் பேரோடு இருந்தாலும், ஒட்டு உறவு இருந்தாலும், அவரவர் வாழ்வில் எடுக்கும் முடிவும், பயணமுமே அவரவரின் தனித்தன்மையையும், ஆளுமையையும் வெளிப்படுத்தும், உலகத்தின் முன் அவர் போற்றுதற்குரியவரா? மதிப்பிற்குரியவரா? அல்லது வேடிக்கைப் பொருளா? கேலிப் பொருளா? என்பது தயவுதாட்சண்ய அற்ற வெட்டவெளிச்சமாகும். அங்கு இவ்வுலகத்தினிடமிருந்து ஈவையோ, இரக்கத்தையே சிறிதும் எதிர்பார்க்கக் கூடாது. முடியாது.

இது அவரவரின் தனிப்பட்ட பொறுப்பு. சுற்றியுள்ளவற்றிலிருந்து பாடம் கற்றுக் கொள்வதிலிருந்து, அதைப் புரிந்து அதைக் கொண்டு தன் வாழ்வை அமைத்துக் கொள்வதைத்தான் உலகம் ஒவ்வொருவரிடமும் எதிர்பார்க்கும். உண்மையைச் சொல்ல வேண்டுமென்றால், உலகம் நம்மை வேடிக்கைதான் பார்க்கும். இந்த உலகம் ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும்தான் ஒருவருக்கு உதவிக்கரம் நீட்டும், மற்றதெல்லாம் அவரவரின் பொறுப்புதான்.

அழுதழுது பெற்றாலும் அவளவள்தான் பெற்றாக வேண்டும்.

ஒருவருடைய இலட்சியம் எது? அதற்காக தம் வாழ்வு எதற்காக, எதை நோக்கி இருக்க வேண்டும், அந்த வாழ்வு தனக்கானதா? அல்லது வேறு ஒருவரின் கனவுக்காகவா? அல்லது அந்த இலட்சியமே தன் வாழ்வா? என்பதை அவரவர்தான் முடிவு எடுக்க வேண்டும்.

ஒருவர் தனக்காகவே தன் வாழ்வை அமைத்துக் கொள்ளலாம். அல்லது தன்னைக் கவர்ந்த, தான் விரும்பும் ஒருவர் காட்டிய, காட்டும் வழியில் செல்ல முடிவெடுத்து பயணிக்கலாம். அதுதான் இலட்சிய வாழ்வு. ஒருவர் தனக்காக வாழாமல், தான் விரும்பும் வாழ்வைவிட, தனக்குக் காட்டப்பட்ட வாழ்வு

ஒப்புயர்வற்றது என்பதை உணர்ந்து அதற்காகவே தன் விருப்பு வெறுப்புகளைத் துறந்து, அந்த இலட்சியத்துக்காகவேத் தன் வாழ்வை அமைத்துக் கொள்தே ஆகச் சிறந்த முடிவு என்பதைத்தான் காயைத் தவிர்த்துக் கனியை கவர்வது என்று வள்ளுவப் பெருந்தகை கூறினார்.

காய்தான் மிகவும் கவர்ச்சியாக இருக்கும், ஆனால் அது காய் என்று கண்டுகொள்வதே ஞானம். கனியைக் கண்கொண்டால் அவர்களின் காலம் கனிந்துவிட்டது என்றுதான் பொருள். ஆனால் அது மிகவும் சிறமமானது. அத்தகைய பக்குவம் எல்லாருக்கும் வாய்க்காது. கேட்பவர்கள், தேடுகின்றவர்கள், தட்டுகின்றவர்கள் மட்டுமே பெறுகின்ற பாக்கியமிது.

இதுதான் எதார்த்தமான உண்மை. இதைத்தான் இயேசு பெருமான் தன்னைப் பின்பற்ற விரும்பும் எவரும் தன்னலம் துறந்து தன் சிலுவையைத் தூக்கிக்கொண்டு தன்னைப் பின்பற்றட்டும் என்று கூறினார்.

இயேசுவைப் பின்பற்றுவது, சுலபமல்ல, அது பணிகள் நிறைந்தது, தன்னலமற்றது, அதாவது பாரமானது, வலிகள் நிறைந்தது. அது இரத்தமும் சகதியும் நிறைந்த பாதை. ஆனால் அது மகிமைத் தரும் பாதை.

அதன்மீது ஆர்வம் கொண்டு, ஓடிவருபவர் பலர். ஆனால், அதில் நிலைத்து நிற்பவர்தான் வீரராய் மதிக்கப்படுவர். அவர்களே அந்தப் பாதையில் கோலோச்சுவர். குலக் கொழுந்தாக, குன்றிலிட்ட விளக்காக மிளிர்வர். துக்கமெல்லாம் களிநடனமாக மாறும். அதுவே இறைவன் தரும் வெகுமதி. இறுதிவரை நிலைத்து நிற்பவர்க்கே அது வாய்க்கும். அதைத்தான் இயேசு பெருமான் வாக்களித்துள்ளார்.

ஆர்வக்கோளாறு, துவக்கத்தில் மட்டுமே கிலுகிலுப்பைத்தரும். ஆனால் அதில் தொடர்கின்றபோதுதான், வலிகள் அதிகமாக அதிகமாக பலர் துவண்டு விடுவர். பெரும்பாலோனோர் இரட்டை வேஷம் போடுவர். அல்லது விலகி தன்னலப் பாதையில் பயணிக்க ஆரம்பித்துவிடுவர்.

இதை, உரக்க மற்றும் உரைக்கச் சொல்வதற்காகத்தான், இயேசு பெருமான், அழைக்கப்பட்டோர் பலர், ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்டோர் வெகு சிலரே என்று சொன்னார்.

ஷோக்குப் பேர்வழிகளுக்கு இயேசுவை பின்பற்றுவது இயலாத காரியம். உன் பேச்சு ஆம் என்றால், ஆம் என்று இருக்கட்டும், இல்லை என்றால் இல்லை என்று இருக்கட்டும் இதற்கு மாறான சிந்தனையுடையோர், பிழைக்க வந்தவர்கள், அப்படிப்பட்டவர்கள் தீயவர்கள், எனக்கு விரோதமானவர்கள் என்றும் இயேசு கூறுகின்றார்.

கிராமத்தில் ஒரு பழமொழி ஒன்றைக் கூறுவர். கழுதைக்குத் தெரியுமா கரும்பின் ருசி என்று.

இதற்கு ஒரு சுவாரஸ்யமான கதை ஒன்று உண்டு.

ஒருநாள் ஒரு கழுதை கரும்பு சாப்பிட ரொம்ப ஆசைபட்டது. ஆகவே, அருகில் இருந்த ஒரு கரும்பு தோட்டத்திற்குச் சென்றது. அந்தக் கரும்புத் தோட்டத்தைச் சுற்றி முற்வேலி அமைக்கப்பட்டிருந்தது. அதனால் அந்தத் அந்தக் கழுதையால் தோட்டத்திற்குள் செல்ல முடியவில்லை. முள் வேலிக்கு வெளியிலிருந்து கரும்பை ஆசையாகப் பார்தது, நாக்கைத் தொங்கப்போட்டு உச்சுக் கொட்டிக் கொண்டிருந்தது. அந்த முள் வேலியில் இருந்த இடைவெளியில் தனது நாக்கை நீட்டி அருகிலிருந்த கரும்பைக் கடிக்க முயற்சி செய்து கொண்டிருந்தது. இருந்தாலும் கரும்புகள் முள் வேலியிலிருந்து சற்றுத் தள்ளி இருந்ததால், அதனால் அந்தக் கரும்பைக் கடிக்க முடியவில்லை.

அச்சமயத்தில் அந்தக் கரும்புத் தோட்டக்காரர் தூரத்திலிருந்து இதையெல்லாம் பார்த்துக் கொண்டிருந்தார். அந்தக் கழுதையின் ஆசையையும், ஆர்வத்தையும் கண்டு மனமிறங்கி, அந்தக் கழுதைக்கு ஒரு கரும்பைக் கொடுக்க ஆசைபட்டார். ஆகவே அவர் ஒரு முழுக் கரும்பை அடியோடு வெட்டி, அதன் தேகையெல்லாவற்றையும் நீக்கிவிட்டு அந்த கரும்பைக் கழுவி அதை ஒரு துண்டால் துடைத்துவிட்டு அந்த அழகான சுவையான கரும்பை தூக்கிக் கொண்டு அந்தக் கழுதையை நோக்கி வந்தார், அப்போது அந்தக் கழுதை அவர் வருவதைப் பார்த்ததும் ஓட ஆரம்பித்தது. அந்தத் தோட்டக்காரர் அந்தக் கரும்பைத் தூக்கிக் கொண்டு, ஏய் ஓடாதே, ஏய் ஓடாதே, இந்தா கரும்பு என்று அந்தக் கழுதையைத் துரத்த ஆரம்பித்தார். அதைப் பார்த்த அந்தக் கழுதை ஐயோ, நான் இனிமே இந்தப் பக்கமே வரமாட்டேன் மன்னுச்சுச்குங்கோ, என்று நாலுகால் பாயச்சலில், தப்பிச்சாப் போதும்டா சாமி என்று ஓட்டமெடுத்துச்சாம்....

அந்தத் தோட்டக்காரர், அந்தக் கழுதையின் ஆசையைப் போக்க அது விரும்பிய ஒரு நல்ல சுவையான கரும்பை கொண்டு போனார்....ஆனால் அந்தக் கழுதை, அந்தத் தோட்டக்காரர் தன்னை அடிக்க ஒரு நீண்ட கம்பைத் தூக்கிக்கிட்டு ஓடி வருவதாக நினைத்து ஓட்டமெடுத்ததாம்.

அதுபோல, இயேசுவைப் பின்பற்றுவது மிகச்சிறந்த முடிவுதான், ஆனால், அதன் முழுப்பலனும், பலமும், அவரைப் பின்பற்றுவதில் வருகின்ற சிலுவைகளால்தான் கிடைக்கும் என்பதை இயேசு சுட்டிக்காண்பிக்கின்றார். ஆனால், அவரைவிட்டு விலகும் அனைவரும், அந்தக் கழுதையைப்போல, சிலுவை நம்மைச் சிதைக்க வந்திருக்கின்றது என்று நினைத்து விடுகின்றோம்.

அதற்காகத்தான் கேட்கச் செவியுள்ளவர் கேட்கட்டும், புரிந்து கொள்பவர்கள் புரிந்து கொள்ளட்டும் என்றும், என் பின்னால் வர்றவங்க வாங்க, மறக்காம உங்கள் சிலுவையைத் தூக்கிட்டு வாங்க என்று இயேசு எல்லேரையும் பார்த்துக் கூறுகின்றார்.

இதுதான் தவக்காலம் வலியைப்பற்றி நமக்குத் தரும் நற்செய்தி.



# விவிலியம் அறிவோம்-80



அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF

## தீட்டானவை மற்றும் தீட்டற்றவை பற்றியச் சட்டங்கள் (லேவி 11-15)

லேவியர் 11-15 வரையுள்ள பிரிவுகள் தீட்டற்றவை மற்றும் தீட்டானவைபற்றிய சட்டங்களாக உள்ளன. இந்தச் சட்டங்கள்; இன்றைய வாசகர்கள் நடுவில் ஒருசில முரண்பாடுகளை உருவாக்கலாம். இந்தச் சட்டங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு லேவியர்களின் வழிபாட்டுமுறை அமைப்புபற்றி அறிந்து கொள்வது அவசியமானது. லேவியர்களின் வழிபாட்டுமுறை இரண்டு வித்தியாசமான காரியங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. முதலாவதாக தீட்டற்றவையோடு தொடர்புடைய செயல்கள். மனிதர்களின் சில செயல்கள், ஒருசில பொருள்கள், மற்றும் உயிரினங்கள் அவர்களைத் தீட்டானவர்களாக மாற்றலாம். எவையெவை மனிதர்களைத் தீட்டானவர்களாக மாற்றுகின்றன? எவையெவை அவர்களைத் தீட்டற்றவர்களாக இருக்கச் செய்கின்றன? என்ற கேள்விகளுக்கான விடைகள் தர நிலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. இரண்டாவது தூய்மையோடு தொடர்புடைய செயல்கள். மனிதர்களின் ஒருசில செயல்கள் அவர்களைத் தூயவர்களாக இருக்கச் செய்கின்றன. ஒருசில செயல்கள்அவர்களைத் தூய்மையற்றவர்களாக்குகின்றன. எவையெவை தூய்மையானவை? எவையெவை தூய்மையற்றவை என்பவை தரநிலைகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்றன. தீட்டற்றவை மற்றும் தூயவைபற்றிய ஆய்வுகள் யார் கடவுளின் திருமுன்னிலையில் வருவதற்குத் தகுதியானவர்கள் என்பதைத் தீர்மானிக்கின்றன. தீட்டானவை எதுவும் கடவுளின் திருமுன்னிலையில் வருவதற்குத் தகுதியில்லாதவை. தீட்டற்றவை மட்டுமே கடவுளின் திருமுன்னிலையில் வரமுடியும். இதற்கு மாறாக தூய்மை என்பது கடவுளின் பிரசன்னத்தோடு தொடர்புடையது. தூயவை கடவுளின் பிரசன்னத்தைக் கடத்துகின்றன. தூய்மையற்றவை அவ்வாறு செய்யமுடியாது.

இந்தவேறுபாடுகளை அடிப்படையாகக் கொண்டு சில சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.. உதாரணமாக, தீட்டற்ற ஒரு பொருள் தூயதாகவோ அல்லது தூய்மையற்றதாகவோ இருக்கலாம். அதைப்போல தூய்மையற்ற ஒரு பொருள் தீட்டற்றதாகவோ அல்லது தீட்டானதாகவோ இருக்கலாம். எனினும் ஒரு தூய பொருள் ஒருபோதும் தீட்டானதாக இருக்க முடியாது. அதைப்போல தீட்டான ஒரு பொருள் ஒருபோதும் தூயதாக இருக்கமுடியாது. உண்மையில், ஒரு தீட்டான பொருள் ஒரு தீட்டற்ற பொருளை தீட்டானதாக மாற்றலாம்; ஒரு தூய பொருளை இழிவுபடுத்தலாம். சுருக்கமாகக் கூறினால் லேவியர் வழிபாட்டு அமைப்புமுறை தூயதை தீட்டானவற்றிலிருந்து விலக்கி வைப்பதை வலியுறுத்துகிறது. கடவுள் திருஉறைவிடத்தில் வாழ்வதன் வழியாக இஸ்ரயேல் மக்கள் நடுவில் வாழ்கின்றார். எனவே பாளையத்தில் வாழ்கின்ற அனைத்து மக்களும் பாளையமும் தீட்டற்றதாக இருக்கவேண்டும். அப்போதுதான் அவர்கள் தூயவரான கடவுளின் திருமுன்னிலையில் இருப்பதற்குத் தகுதியுள்ளவர்களாக இருக்கிறார்கள். இத்தகைய வழிபாட்டுமுறை அமைப்பில்

தூய்மைக்குத் தரநிலைகள் உள்ளன. குறிப்பாக திருஉறைவிட முற்றத்திற்கு வருவதற்கு தீட்டற்றவர்களாக மட்டுமே இருந்தால் போதாது; தரநிலையில் உயர்ந்தவர்களாக இருக்கவேண்டும். இவற்றை மனதில் கொண்டவர்களாக நாம் இப்போது தீட்டற்றவை மற்றும் தீட்டானவை பற்றிய சட்டங்களைஆய்வுசெய்வோம்.

தீட்டற்றவை மற்றும் தீட்டானவைபற்றிய சட்டங்களில் மிகவும் முக்கியமானதும் புகழ்பெற்றதுமாகக் கருதப்படுவது தீட்டற்ற மற்றும் தீட்டான விலங்குகள் பற்றிய பகுதியாகும் (லேவி 11:1-47). இந்தச் சட்டங்கள் பிற்கால யூதர்களின் மரபில் உணவுச் சட்டங்களாகக் கடைபிடிக்கப்பட்டன. எபிரேய மொழியில் கோசேர் (வலிவிஜுளஷெ) உணவு என்றழைக்கப்பட்டன. இதன் பொருள் உண்ணத்தக்க, தகுதியான உணவு என்பதாகும். விலங்கினங்கள், நீர்வாழ் உயிரினங்கள், பறவை இனங்கள் ஆகிய உயிரினங்களில் பல தீட்டானவைகளாகக் கருதப்பட்டு உண்பதற்குத் தகுதியற்றவைகளாகப் பார்க்கப்படுகின்றன. அவைகளில் முக்கியமானதாக விலங்கினங்களில் பன்றியும், நீர்வாழ் உயிரினங்களில் துடுப்பும் செதிலும் அற்ற மீன்வகைகளும்; அருவருக்கத் தக்கவையாகக் கருதப்படுகின்றன. தரையில் வாழும் விலங்கினங்கள், நீரில் வாழும் உயிரினங்கள் மற்றும் பறவைகளில் தீட்டானவை மற்றும் தீட்டற்றவை என்பது எதன் அடிப்படையில் மதிப்பிடப்படுகின்றன என்ற கேள்வி எழுகிறது. முந்தைய காலத்தில் உண்ணலாம் என்று கருதப்பட்ட விலங்கினங்கள், மீனினங்கள் மற்றும் பறவைகள் ஏன் இப்போது உண்பதற்குத் தகுதியற்றவை எனக் கருதப்படுகின்றன? வெள்ளப் பெருக்கத்திற்குப் பிறகு கடவுள் நோவாவிற்கும் அவரது வழிமரபினருக்கும் அனைத்து வகையான விலங்கினங்களையும் உணவாகக் கொடுக்கிறார்.

நடமாடி உயிர்வாழும் அனைத்தும் உங்களுக்கு உணவாகட்டும். உங்களுக்குப் பசுமையான செடிகளை உணவாகத் தந்ததுபோல இவை எல்லாவற்றையும் தருகிறேன் (தொநூ 9:3) என ஆண்டவர் நோவாவிடமும் அவரது மகன்களிடமும் கூறுகிறார். ஒரேயொரு கட்டுப்பாட்டைதான் அவர்களுக்கு விதிக்கிறார். அது, இறைச்சியை அதன் உயிராகிய இரத்தத்தோடு உண்ணாதீர்கள் (தொநூ 9:4) என்பதாகும். இப்போது ஏன் இந்தக் கட்டுப்பாடுகள்? லேவியர் நூலில் விதிக்கப்பட்டிருக்கும் இந்த உணவுக் கட்டுப்பாடுகளுக்கு அடிப்படைக் காரணங்கள் என்ன? காலங்காலமாக அறிஞர்கள் இந்தக் கேள்விகளைக் கேட்கிறார்கள். அதற்கு விதவிமான பதில்களையும் கொடுக்கிறார்கள். அவற்றில் ஒரு சிலவற்றை இங்கே காண்போம்.

1.சுகாதாரம் விளக்கம்: ஒருசில அறிஞர்களின் பார்வையில் தீட்டானவை என ஒதுக்கப்பட்ட விலங்குகள், நீர்வாழ் உயிரினங்கள் மற்றும் பறவைகள் அனைத்தும் மனிதர்களின் சுகாதராத்திற்கு எதிரானவைஎனக் கூறப்படுகின்றன. சு.மு.காரிசன் என்ற அறிஞரின் கருத்துப்படி தீட்டற்றவை என கூறப்படுகின்ற விலங்கினங்கள் தாவர உணவு வகைகளை உண்ணும் விலங்கினங்கள். செத்த விலங்குகளின் இறைச்சியை உண்ணும் தீட்டான விலங்குகளைப் போல இவை நோய்க் கிருமிகளைச் சுமப்பதில்லை. எனவே நோய்களைப் பரப்பக்கூடிய விலங்குகளைத் தடைசெய்வதன் வழியாக கடவுள் இஸ்ரயேல் மக்கள் சுகாதாரத்துடன் வாழ வழிவகுக்கிறார். உதாரணமாக, பன்றி சுகாதாரமற்ற ஒரு விலங்கு. அதன் இறைச்சியை உண்பதனால் பலநோய்கள் வருவதற்கு வாய்ப்புண்டு. மீன் வகைகளில் துடுப்பும் செதிலும் இல்லாத மீன்கள் சில நச்சுத்தன்மைகளைஅதன் திசுக்களில் சேமித்துவைக்கின்றன எனக் கூறப்படுகிறது. எனவே அவைகளை உண்பது மனிதர்களின் சுகாதாரத்திற்கு எதிராகச் செயல்படலாம். இந்த விளக்கம் பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. குறிப்பாக இடைக்காலத்தில் வாழ்ந்த யூத மெய்யியல் அறிஞரான மோசேமைமோனிதெஸ் இக்கருத்தை ஏற்கிறார். இக்கருத்து பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் நமக்கு ஒரு கேள்வி எழுகிறது. தீட்டானவை மற்றும் தீட்டற்றவை என வகைப்படுத்துவதற்கு சுகாதாரமே அடிப்படை என்றால் இயேசு ஏன் எல்லா உணவுப் பொருள்களும் தூயன வென்றுகுறிப்பிட்டார் (மாற்கு 7:19)?

2.அழகியல் விளக்கம்: தீட்டானவை என விலக்கப்பட்ட இந்த விலங்கினங்கள், மீனினங்கள், மற்றும் பறவைகள் அனைத்தும் மக்களால் விரும்பப்படும் உயிரினங்கள் அல்ல; மாறாக வெறுத்து ஒதுக்கப்படுகின்ற உயிரினங்கள். எனவே அவை உண்ணத்தகாதவை என்ற கருத்து ஒரு சிலரிடையே உள்ளது. இந்தக் கருத்தும் முழுவதுமாக ஏற்கக்கூடிய கருத்தல்ல. ஏனெனில் விருப்பம் தனி மனித உணர்வுகளைச் சார்ந்தது. அனைவராலும் விரும்பப்படாத பொருள் என எதையும் நாம் கூறமுடியாது.


3. அறநெறி விளக்கம்: இந்த விளக்கத்தின்படி இஸ்ரயேல் மக்கள் சில வகையான உணவு உண்பதைத் தவிர்க்கவேண்டும். அதுஅவர்களின் சுயக் கட்டுப்பாட்டிற்கும், வன்முறை மற்றும் இரத்தம் சிந்துதல் போன்றவற்றைத் தவிர்க்கவும் உதவும். இந்த விளக்கத்தின்படி தீட்டு எனக் கருதப்படும் விலங்குகள் மற்றும் ஏனைய உயிரினங்கள் காமம், பொறாமை, கோபம் போன்ற மனித உணர்வுகளின் அடையாளங்களாக உள்ளன. இந்தக் கருத்துக்களை கி.பி. முதல் நூற்றாண்டு யூத இலக்கியமான அரிஸ்டேயாஸ் கடிதம் என்ற நூலிலும், திருஅவை தந்தையர்களின் எழுத்துக்களிலும் காணலாம். குறிப்பாக உரோமை நோவாசியன் எழுதிய யூதர்களின் உணவுகள் (மூன்றாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது) போன்றவற்றிலும் காணலாம். இந்தக் கருத்தும் ஏற்கக்கூடிய கருத்தாகத் தெரியவில்லை.

4.உடற் கூறியல் விளக்கம்: தீட்டற்றது எனக் குறிப்பிடப்படுவது முழுமையைக் குறிக்கிறது அல்லது இயல்பு நிலையைக் குறிக்கிறது. முழுமையானதாக இல்லாமலும், இயல்பானதாக இல்லாமலும் இருப்பவை தீட்டானவை. இந்தக் கருத்தை முன்வைத்தவர் சமூகவியலாளர் மேரிடக்ளஸ் என்ற அறிஞர். அவரது கருத்துப்படி தீட்டான விலங்குகள் என வகைப்படுத்தப்பட்ட விலங்குகள் முரண்பாடான விலங்குகள். அவை கலக்கக்கூடாத சிலவற்றின் கலப்பாக உள்ளன. உதாரணமாக, பாலூட்டிகள் விரிகுளம்புகள் உள்ளவையாக, அசைபோடுபவையாக இருக்கவேண்டும். விரிகுளம்புகள் இல்லாமலும் அசைபோடாமலும் உள்ள விலங்குகள் மற்றும் பன்றி போன்ற பல கூறுகளைக் கொண்ட கலப்பு விலங்குகளும் உண்ணப்படலாகாது. ஏனெனில் அவை இயல்பானவை அல்ல. அதைப்போல நீர்வாழ் உயிரினங்களில் துடுப்பும் செதிலும் உள்ளவை இயல்பானவை; எனவே அவை உண்ணப்படலாம். துடுப்பும் செதிலும் இல்லாமல் நீரில் வாழுகின்ற உயிரினங்கள் இயல்பானவை அல்ல; எனவே அவை உண்ணப்படலாகாது. பறவையினங்களில் நான்கு கால்களைக் கொண்ட பறவைகள் கால்நடை இனத்தைச் சார்ந்தவையா அல்லது பறவையினத்தைச் சார்ந்தவையா என்ற குழப்பத்தை ஏற்படுத்துகின்றன. அவை இயல்பானவை அல்ல எனவே தீட்டானவை. மேரிடக்ளஸின் கருத்துக்களும் ஏற்கக்கூடியதாக இல்லை. ஏனெனில் இந்தக் கருத்து படைப்பிற்கு எதிரான கருத்தாக உள்ளது. கடவுள் இந்த உலகையும் உலகில் உள்ள யாவையும் படைத்தபோது அனைத்தையும் நல்லது எனக் கண்டார் என வாசிக்கிறோம் (தொநூ 1:25). அனைத்து படைப்புகளும் நல்லவை என்றால் அனைத்தும் இயல்பானவைதான்.

5.வழிபாட்டு விளக்கம்: தீட்டான விலங்குகள் என வகைப்படுத்தப்பட்ட விலங்குகள் பிற இனத்தவருடனும், அவர்களின் சமயம் மற்றும் கலாச்சாரத்தோடும்; தொடர்புடையவை. இந்த விலங்குகளை வழிபாடுகளில் தவிர்ப்பதன் வழியாக இஸ்ரயேல் மக்கள் பிறவினத்தவரின் பழக்கவழக்கங்களைப் பின்பற்றாமல் தடுக்கப்படுகிறார்கள். கடவுள் இஸ்ரயேல் மக்களைத் தேர்ந்தெடுத்தார்; அவர்கள் பிற இனமக்களைவிட வித்தியாசமானவர்களாக இருக்கவேண்டும் என ஆசித்தார். குறிப்பாக அவர்களின் அறநெறி வாழ்வில் தனித்தவர்களாக இருக்கவேண்டும் என விரும்பினார் (லேவி 18:24). பிற இனத்தவரின் வழிபாடுகளில் பயன்படுத்தப்பட்ட சில கூறுகள் மிகவும் கீழ்த்தரமானவை. அவை இஸ்ரயேல் மக்கள் நடுவில் இருப்பதைக் கடவுள் விரும்பவில்லை. உதாரணமாக, பாதாள உலகின் தெய்வங்களை வழிபடுவதற்கு பன்றி பயன்படுத்தப்பட்டது, மேலும் கானானியர்களும் தங்கள் வழிபாட்டில் பன்றியைப் பயன்படுத்தினார்கள். இவைகளை விலக்குவதன் வழியாக இஸ்ரயேல் மக்கள் தூயவர்களாக வாழமுடியும். அவர்கள் அடிமைகளாக இருந்து வெளிவந்த நாட்டில் பின்பற்றப்படுகின்ற சிலை வழிபாட்டுக் காலாச்சாரத்தையும் அவர்கள் குடியேறிய கானான் நாட்டில் உள்ள சிலைவழிபாட்டுக் கலாச்சாரத்தையும் கைவிட்டுவிடுவார்கள். மீண்டும் அவற்றிற்கு அடிமையாகாமாட்டார்கள் என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இந்த விளக்கமும் முழுமையாக ஏற்கக்கூடியதாக இல்லை. அதற்கான கரணங்களை அடுத்தவாரம் சிந்திப்போம்.

பயணம் தொடரும்...

அருட்பணி. ஆ. அலெக்ஸ் CMF



# ஞாயிறு மறையுரை

## தவக்காலம் 2-ம் ஞாயிறு

05-03-2023

மறையுரை வழங்குபவர்




அருட்பணி. **ராபர்ட்**
உதவிப்பங்குத்தந்தை
புனித.விண்ணரசி அன்னை ஆலயம்
மேற்கு மரியநாதபுரம், திண்டுக்கல்


முதல் வாசகம் – தொ.நூ 12:1-4
இரண்டாம் வாசகம் – 2 தீமோத்தேயு 1:8-10
நற்செய்தி வாசகம் – மத்தேயு 17:1-9

ஒரு சிறுவன் இயேசுவின் மீது கொண்டிருந்த அதீத பற்றின் காரணமாய் குருவானவர் ஆக வேண்டும் என்று ஆசைப்படுகின்றான். குருமடத்தில் இணைந்த பிறகு தன்னுடைய அன்பு செயல்களால் அனைவரையும் கவர்கின்றான். அன்பு பிள்ளையாய் வலம் வருகின்றான். குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்ட பிறகு அவனுக்கொரு அதிர்ச்சி காத்திருந்தது. அவனை அவனுடைய மறைமாவட்ட ஆயர் மொலாக்காய் என்ற இடத்தில் பணிசெய்ய பணித்திருந்தார். இதில் என்ன அதிர்ச்சி என நீங்கள் நினைக்கலாம். மொலாக்காய் என்பது ஒரு சிறிய தீவு. இந்த தீவு தொழு நோயாளர்களுக்கான தீவு. இந்த தீவில் விடப்படுபவர்களுக்கு மரணம் மட்டுமே சொந்தம் என்பது அனைவரும் அறிந்ததே. இருந்தாலும் கூட மகிழ்ச்சியாய் தன் பணியை துவங்கினார் அந்த பெல்ஜிய நாட்டு குரு. அங்கு வாழ்ந்த தொழுநோயாளர்களின் குறை தீர்க்க அவர்களுக்கு தண்ணீர் வசதி மற்றும் சுகாதார வளாகங்களின் தேவையை உணர்ந்து அவர்களுக்கு அத்தேவைகளை விரைந்து நிறைவேற்றினார். தீவில் வாழ்ந்த தொழுநோயாளர்களுடன் இணைந்து ஒரு சிற்றாலயத்தை எழுப்பினார். அம்மக்களுக்காய் ஒவ்வொரு திருப்பலியிலும் தொழுநோயாளர்களாகிய உங்கள் அனைவரையும் கடவுள் அன்பு செய்கிறார் என்று சொல்வதை தொழுநோயாளர்களாகிய நம் அனைவரையும் கடவுள் அன்பு செய்கிறார் என்று கூறும் போது தான் அனைவரும் புரிந்து கொண்டனர் அவருக்கும் தொழுநோயானது தொற்றியிருந்ததை. தன்னை முற்றிலுமாக தொழுநோயாளர்களுக்கான அர்ப்பணித்திருந்த அவர் அவர்களாய் மாறிப்போனார் அவர்களுக்காய் மாண்டார். இதுவே மாற்றத்திலிருந்து பிறந்த உருமாற்றம்.

இயேசு இறைவனின் திருவுளமென்ன என்பதை நன்கு அறிந்து வைத்திருந்தார். தான் உருமாற்றம் அடைவதற்கு முன்பாக தான் எருசலேமுக்கு செல்ல வேண்டும்; அங்கு பாடுகள்பட்டு கொலை செய்யப்பட்டு மூன்றாம் நாள் உயிருடன் எழுப்பபட வேண்டும் என தனது சீடர்களிடம் முன்னறிவிக்கிறார். காரணம் சாவு தான் என தெரிந்தும் கூட எவன் ஒருவன் அவரது சிலுவைச் சாவில் பங்கு கொள்கின்றானோ அவனே உருமாற தயாராக இருக்கின்றான் என அர்த்தம். இப்படிப்பட்ட மாற்றத்தின் வழியாகத்தான் உருமாற்றம் சாத்தியம் என்பதை நமக்கு எடுத்தியம்புகிறார். மாற்றத்திற்கு பின் தான் உருமாற்றம் என்பதைத் தனது சீடர்களுக்குப் பறைசாற்றிய பின் இயேசு முக்கியமான மூன்று சீடர்களை அழைத்துக்கொண்டு ஓர் உயர்ந்த மலைக்குச் செல்கின்றார். அங்கே உருமாறுகிறார். அங்கு நடந்த அற்புத செயல்களை கண்டு இயேசுவே நாம் இங்கேயே தங்கி விடுவது நல்லது என பேதுரு கூறுகிறார். கரடு முரடான பேதுருவே இறைபிரசன்னத்தை உணர்ந்து அங்கு நடக்கக்கூடிய வல்லமைகளால் மனம் குளிர்ந்து போகின்றார். இந்த வாய்ப்பை இயேசு அருமையாக பயன்படுத்தி என்னைப் பின்பற்ற விரும்புகிறவர்கள் இந்த வாழ்வை அனுபவிக்கலாம் என சொல்லியிருக்கலாம்; ஆனால் அவர் அதை செய்யவில்லை. மானிட மகன் இறந்து உயிருடன் எழுப்பப்படும்வரை இக்காட்சியைப்பற்றி எவருக்கும் சொல்லக்கூடாது என்று தனது சீடர்களைக் கேட்டுக்கொள்கின்றார்.

தனது உருமாற்றத்திற்கு முன்னும் பின்னும் பாடுகளைப்பற்றி பேச காரணம் தன் உயிரை இழக்க முன்வரும்போது தனது உருமாற்றத்தில் பங்குண்டு என்கிறார். இயேசு துன்புற சிலுவை சுமக்க அழைக்கிறார். எதற்காக இப்படிப்பட்ட கசப்பான அழைப்பு? புனித பவுல் இதற்கான பதிலை இன்றைய இரண்டாம் வாசகத்தில் அளிக்கின்றார். இயேசு துன்பத்தின் வழியாக அவருக்கு சாட்சி பகர நற்செய்திக்கு ஏற்ப துன்பப்பட அழைப்பு விடுக்கின்றார். இதைத்தான் இன்றைய முதல் வாசகத்திலும் ஆபிரகாம் வழியாக நடந்தேறுவதையும் பார்க்கின்றோம். ஆபிரகாம் தன்னுடைய உடமைகளை உரிமைகளை அனைத்தையும் விட்டுவிட்டு அறியாத நாட்டிற்கு கனத்த இதயத்துடன் செல்கின்றார். அவரின் கனத்த இதயம் இறைவனில் பேரின்பம் கொள்ளும் மனிதனாய் மாற்றியதற்கு காரணம் இறைத்தந்தையின் திட்டத்திற்காய் தன்னையே கையளிக்கின்றார் விண்மீன்களாய் மாறிப்போகின்றார். எந்தளவுக்கு ஒருவன் கிறிஸ்துவின் பாடுகளில் பங்குகொள்கின்றானோ அந்த அளவுக்கு அவன் உருமாகின்றான். இயேசுவின் உருமாற்றத்தில் பங்கு கொள்கின்றான். எனவே இத்தவக்காலத்தை பயன்படுத்தி நாமும் மாற்றம் பெறுவோம் இயேசுவின் உருமாற்றத்தில் பங்கு பெறுவோம்.

இறைவன் ஒவ்வொரு மனிதனுக்கும் ஒருசில கொடைகளைக் கொடுத்துள்ளார். அறிவாக இருக்கலாம், திறமையாக இருக்கலாம், செல்வமாக இருக்கலாம், இவற்றையெல்லாம், மனிதன் தன் சுயநலத்திற்காகப் பயன்படுத்த சூழ்நிலை சில சமயங்களில் மனிதனைச் சோதிக்கின்றது.எனவே, சோதனை என்பது வெளியிலிருந்து வருவதில்லை, அது நம் உள்ளேயே இருக்கின்றது. வாழ்க்கை என்றிருந்தால் சோதனையும் உண்டு, சோதனையே இல்லாத வாழ்க்கைதான் எனக்கு நிம்மதிதரும் என்று தீர்மானித்தால் உங்கள் சோதனையில் வெற்றிபெற வழியேயில்லை, ஆமென்.



# தவக்காலத்தின் 2-ஆம் ஞாயிறு

தொ.நூ. 12:1-4, 2 தீமோ. 1:8-10, மத். 17:1-9

**05-03-2023**



**பா. சேவியர்**
மரியநாதபுரம்,
திண்டுக்கல்

## திருப்பலி முன்னுரை

துன்பம் எதுவரினும், துயர் எதிர்வரினும் கலக்கம் வேண்டாம். கவலை வேண்டாம். ஆண்டவரிடம் உங்களையே ஒப்படையுங்கள், ஆண்டவரை எண்ணி அகமகிழுங்கள் என்ற தாய்த் திருச்சபையின் அழைப்பை ஏற்று தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு வழிபாட்டிற்கு வருகை தந்துள்ள உங்கள் அனைவரையும் இன்முகத்துடன் வரவேற்கிறேன்.

இன்றைய வாசகங்கள் நற்செய்தியின் பொருட்டு துன்பத்தில் பங்குகொள்வோம் என்ற சிந்தனையை தாங்கி வருகின்றன. கிறிஸ்துவர்களாகிய நாம் ஒவ்வொருவரும் பவுல் அடியாரைப் போன்று, ஆபிரகாமைப் போன்று ஆண்டவர் இயேசுவுக்காக, கடவுளுக்காக சிலுவைகளை தாங்கிக்கொள்ள வேண்டும். துன்பங்களை ஏற்றுகொள்ள வேண்டும் என்பதை இன்றைய வார்த்தை வழிபாடு நமக்கு உணர்த்துகிறது.

நாம் உளமாற்றம் அடைய வேண்டும் என்பதற்காகவே, இயேசுவின் உருமாற்றம் நிகழ்கிறது. துன்பங்களை அனுபவித்துத்தான் மீட்பை அளிக்க வேண்டும் என்பதை தன் உருமாற்றம் வழியாக நமக்குக் கற்பிக்கின்றார் இறைமகன் இயேசு.

வலிகள் இன்றி ஜனனம் இல்லை, வியர்வை இன்றி உயர்வு இல்லை. போராட்டமின்றி உரிமைகள் இல்லை. பாடுகள் இன்றி மீட்பு இல்லை. சிலுவை இன்றி இரட்சண்யம் இல்லை. அதேபோல் துன்பம் இன்றி இன்பம் இல்லை.

இயேசு துன்பத்தை எதிர்கொள்ள அன்று தம் சீடர்களை அழைத்ததுபோல், இன்று நம்மையும் அழைக்கிறார். அவரது நற்செய்தியின் மதிப்பீட்டிற்காகவும், இறையரசுப் பணியை நிறைவு செய்யவும், நம் வாழ்வில் வரும் துன்ப துயரங்களை புன்முறுவலுடன் ஏற்று, அவற்றை வென்று வாழ இறையருளை வேண்டி இத்திருப்பலியில் பங்கெடுப்போம்.

## முதல் வாசக முன்னுரை

விசுவாசத்தின் தந்தையென அழைக்கப் படும் ஆபிரகாமிற்கு ஆண்டவர் விடுத்த அழைப்பும். அவர் காட்டிய கீழ்படிதலும் விசுவாசமும் இன்றைய முதல் வாசகமாக அருளப்பட்டுள்ளது. ஆபிரகாமின் இந்த அழைப்பிலிருந்துதான் மீட்பின் வரலாறு தொடங்குகிறது. பூமியிலுள்ள இனமெல் லாம் ஆபிரகாமின் கீழ்படிதலால் ஆசி பெற்றன என்பதை விளக்கும் இவ்வாசகத் தை கவனமுடன் கேட்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை

எபேசு நகரத் திருச்சபைக்கு ஆயராக தம்மால் நியமிக்கப்பட்ட திமோத்தேயுவுக்கு பவுலடியார் எழுதிய மடலின் ஒரு பகுதியே இன்றைய இரண்டாம் வாசகம். மனித சாயலில் வந்த இறைமகன் இயேசு இறைவனின் மாட்சிமையைத் தம் சீடர் களுக்கு வெளிப்படுத்தியதன் வழியாக, மனிதனே இறைவன் வாழும் உயிர் உள்ள ஆலயம் என்பதை விளக்கும் இவ்வாசகத் தை கவனமுடன் கேட்போம்.

## மன்றாட்டுகள்

1) அழியா வாழ்வை நற்செய்தியின் வழியாக ஒளிரச் செய்த அன்பு இறைவா, ஆபிரகாம், மோசே, எரேமியா போன்று உமது அழைப்பை ஏற்று, அருட்பணிகள் ஆற்ற தங்களையே முழுமையாக அர்ப்பணித்த அருட் பணியாளர்கள் அனைவரும் திருச் சபையின் பணிகளை கிறிஸ்துவின் கண்ணோட்டத்தில் அணுகி, வாழ்வில் வரும் துன்ப துயரங்களைக் கண்டு மனம் கலங்காமல் அவற்றை வென்று வாழ வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2) எனறும் மாறாத தத்துவமாய் விளங்கும் வல்ல தேவனே. உம் திருமகன் இயேசு தம் மரணத்தை ஆவலுடன் ஏற்றுக்கொள்ள ஊக்கம் தரும் நிகழ்வாக இறை வேண்டலும், தோற்ற மாற்றமும் அமைந்துள்ளன என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து, மனமாற்றம் அடைவதற்கு ஏற்ற காலம் இத்தவக்காலம் என்பதை புரிந்து, செபவாழ்வில் நாங்கள் நிலைக்கவும், எங்களது மன்றாட்டுக் களும், இறை வேண்டலும், உமது திருவுளத்திற்கு பணிந்து நடப்பதற்கு ஊக்கம் தருவதாக அமைந்திடவும், அருள் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3) நாங்கள் வேண்டுவதற்கும், நினைப் பதற்கும் மேலாக எல்லாவற்றையும் செய்யக்கூடியவரான அன்பு இறைவா, மனித சாயலில் வந்த உம் திருமகன் இயேசு உமது மாட்சிமையை தம் சீடர்களுக்கு வெளிப்படுத்தியதன் வழியாக, மனிதனே இறைவன் வாழும் உயிருள்ள ஆலயம் என்பதை தெளிவு படுத்தியுள்ளதை நாங்கள் உளமாற உணர்ந்து ஏற்று, நீர் வாசம் செய்யும் உயிருள்ள ஆலயமாக எமது உள்ளமும் இல்லமும் திகழ்ந்திட அருள்புரிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4) வான் படைகளின் ஆண்டவரே, இறைவா, எங்களுடைய துன்ப துயர வேளைகளில் நீர் உம் மகிமையைக் காண்பிக்கின்றீர், துன்ப துயரங்கள் தான் உமது திருக்கரத்தின் வல்லமை யையும், உமது பிரசன்னத்தையும், மாட்சி நிறைந்த உம் மகிமையையும் எமக்குக் காட்டுகின்றன என்பதை நாங்கள் முழுமையாக உணர்ந்து, எங்களுக்கு வரும் துன்பங்களையும் சோதனைகளையும் இன்முகத்துடன் ஏற்று அவற்றை உமது ஆசியுடன் வென்று வாழ வரமருள வேண்டு மென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.



# திருக்குறள் வழங்கும்
# சமூக நெறிச் சிந்தனைகள்

சிந்தனையாளர்
அருட்சகோதரி. **ஜெஸிந்தா ஜான்சன் FSPM**



## குறள் – 35

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இலன்ற தறம்

### குறள் விளக்கம்

பொறாமை, ஆசை, சினம், கடுஞ்சொல் ஆகிய இந்த நான்கு குற்றங்களுக்கும் இடங்கொடுக்காமல் அவற்றைக் கடிந்து ஒழுகுவதே அறமாகும்

### சிந்தனை

பேன்கட் என்ற ஜென் குருவிடம் ஒரு மாணவன் வந்தார். என்னால் கோபத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதற்கு நான் என்ன செய்வது என்றார். எங்கே உங்கள் கோபத்தைக் காண்பியுங்கள் பார்க்கிறேன் என்றார் பேன்கட். இப்போது முடியாது எப்போதாவது தான் வருகிறது என்றார் மாணவர். அப்படியானால் அது உங்கள் இயல்பல்ல. உங்களுக்குள் கோபம் நுழையும்போது அந்த அந்நிய பிரவேசத்தைத் தடுத்து விடுங்கள் என்றார் குரு. கோபம் நம் இயல்பல்ல: ஏமாந்த நேரத்தில் திருட்டுத்தனமாக வருவது.

மனிதன் நல்லவனாக வாழ மிக முக்கியமாக நான்கு காரியங்களை வள்ளுவர் இந்த குறளில் கூறியுள்ளார். அதில் முதலாவது பொறாமை. இது எல்லோரிடமும் இருக்கும் குணம். வாழ்வில் வெற்றி பெற்று உலகம் வியக்க உயர்நிலையில் இருப்பவர்களைக் குறித்து மனிதன் பொறாமை படுவதில்லை. சச்சின் டெண்டுல்கரையோ, அன்னை தெரசாவையோ பார்த்து பொறாமை கொள்வதில்லை. உடனிருப்பவர்களுடன் தான் பொறாமை கொள்கிறார். உதாரணமாக உதவி ஆசிரியர் தலைமை ஆசிரியரை பார்த்து பொறாமை கொள்கிறார். அலுவலக பணியாளர் சீனியர் அலுவலரைப் பார்த்து பொறாமை கொள்கிறார்.

இரண்டாவது ஆசை. ஆசையே துன்பத்திற்கு காரணம் என அறிந்திருந்தாலும் ஊஞ்சல் அலைவது போல் ஒரு ஆசை நிறைவேறினாலும் அடுத்த ஆசை உருவாகி அலைபாய்கிறது மனித மனம். சைக்கிள் வாங்கவேண்டும் என்ற ஆசையானது சைக்கிள் வாங்கியபின் பைக், கார் இன்னும் பிற என நீள்கிறதே தவிர நிறைவடைவதில்லை. மூன்றாவது கோபம். கோபம் கொள்பவன் தன்னை இழப்பான் என்றறிந்திருந்தாலும் கோபம் கொள்வதால் எதிராளியைவிட தனக்குத்தான் அதிகபாதிப்பு என உணர்ந்திருந்தாலும் அதை குறைக்க மனிதன் முயல்வதில்லை. நான்காவது இன்னாசொல். நாவினால் சுட்ட வடு அழியாது என்றறிந்தாலும் அதனை சரளமாக உதிர்த்து விடுகிறான் மனிதன். இந்த நான்கு காரியங்களையும் விட்டு விட்டால் அறத்தை தேடிச் செய்ய வேண்டிய அவசியமில்லை.

வேதாகமத்தில் ஆண்டவர் இயேசுவும் சகோதரனை 'முட்டாள்' என்று சொல்லாதே என்கிறார். தம் சகோதர சகோதரிகளிடம் சினங்கொள்கிறவர் தண்டனைத் தீர்ப்புக்கு ஆளாவார்: தம் சகோதரரையோ சகோதரியையோ 'முட்டாளே' என்பவர் தலைமைச் சங்கத் தீர்ப்புக்கு ஆளாவார். 'அறிவிலியே' என்பவர் எரிநரகத்திற்கு ஆளாவார் (மத்5:22) என்கிறார். தீயதை தவிர்ப்போம்: நல்வாழ்வு வாழ்வோம்.

திருப்பலி வாசகங்கள்

# தவக்காலம் 1–ஆம் வாரம்

**05.03.2023 முதல் 12.03.2023**

**05.03.2023 – தவக்காலம் 2–ஆம் வாரம் ஞாயிறு**

முதல் வாசகம் : தொடக்கநூல் 12:1–4
இரண்டாம் வாசகம் : 2 திமொத்தேயு 1:8–10
நற்செய்தி : மத்தேயு 17:1–9

**06.03.2023 – திங்கள் கிழமை**

முதல் வாசகம் : தானியேல் 8:4–11
நற்செய்தி : லூக்கா 6:36–38

**07.03.2023 – செவ்வாய் கிழமை**

முதல் வாசகம் : எசாயா 1:10, 16–20
நற்செய்தி : மத்தேயு 23:1–12

**08.03.2023 – புதன் கிழமை**

முதல் வாசகம் : எரேமியா 18:18–20
நற்செய்தி : மத்தேயு 20:17–28

**09.03.2023 – வியாழக்கிழமை**

முதல் வாசகம் : எரேமியா 17:5–10
இரண்டாம் வாசகம் : மத்தேயு 16:19–31

**10.03.2023 – வெள்ளிக்கிழமை**

முதல் வாசகம் : தொடக்கநூல் 37:3,4,12,13,17–28
நற்செய்தி : மத்தேயு 21:33–43,45,46

**11.03.2023 – சனிக்கிழமை**

முதல் வாசகம் : மீக்கா 7:14, 15, 18–20
நற்செய்தி : லூக்கா 15:1–3, 11–32

**12.03.2023 – ஞாயிறு**
***தவக்காலம் மூன்றாம் வாரம்***

முதல் வாசகம் : விடுதலைப்பயணம் 17:3–7
இரண்டாம் வாசகம் : உரோமையர் 5:1,2, 5–8
நற்செய்தி : யோவான் 4:5–42



"Ignorance of Scripture is ignorance of Christ."

- St. Jerome -

# நலம் தரும் இயற்கை வளம்



ஜே. அன்புரோஸ்
கோபிச்செட்டிபாளையம்.

உறவுகளே இனிய வணக்கம். இன்றைய நலக்கல்வி..!

## உங்கள் விரல்களின் பின்னணியில் இருக்கும் ஆரோக்கிய இரகசியங்கள்.!!

உடலின் எந்த ஒரு பாகத்தில் பாதிப்பு ஏற்பட்டாலும்
கைவிரல்களுக்கு பயிற்சி அளித்தே
சரி செய்யலாம்.

கட்டை விரல்....
உங்கள் கட்டை விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வதால்
மன அழுத்தம் குறைய, மனநிலையை கட்டுப்படுத்த முடியும்
நல்ல உறக்கம் பெறலாம்.
மேலும் இது உடற்சக்தியை மேம்படுத்தவும் உதவுகிறது.
கட்டை விரலானது
மண்ணீரல் மற்றும் வயிறு பகுதியுடன் இணைப்புள்ளது ஆகும்.
இது வெள்ளை மற்றும் சிவப்பு இரத்த செல்களை ஊக்குவித்து
செரிமானத்தை சீராக்குகிறது.

ஆள்காட்டி விரல்....
உங்கள் பலவீனம் மற்றும் பயத்தை குறைக்க கூடியது ஆள்காட்டி விரல்.
மேலும், ஆள்காட்டி விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது
உங்களிடம் இருக்கும் அடிமைத்தனத்தினை குறைக்கவல்லது.
உங்கள் ஆள்காட்டி விரல்
சிறுநீரகம் மற்றும் சிறுநீர்ப்பையுடன் இணைப்புக் கொண்டுள்ளது.
சிறுநீரகத்தில் கற்கள் உண்டாகாமல் இருக்கவும்
நீர்வறட்சி ஏற்படாமல் இருக்கவும் பயனளிக்கிறது.

நடுவிரல்...
நடுவிரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது
உங்களது கோபத்தை குறைக்க உதவும்.
தலை பகுதியில் இரத்த ஓட்டத்தை சீராக்கி
தலைவலி ஏற்படாமல் இருக்கவும் இது உதவுகிறது.
நடுவிரலானதுஇ கல்லீரல் மற்றும் பித்தப்பையுடன் இணைப்புடையது.
இது இந்த பாகங்களின் வலிமையை மேம்படுத்துகிறது
மற்றும் உடற்சக்தியை ஊக்குவிக்கிறது.

மோதிரவிரல்...
ஏறத்தாழ கட்டைவிரலுடன் ஒத்துப் போவது தான் இந்த மோதிர விரலும்.
உங்களில் இருக்கும் எதிர்மறை எண்ணங்கள்

மற்றும் தீய எண்ணத்தை குறைக்க
நீங்கள் மோதிர விரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்யலாம்.
மேலும்,
மோதிர விரல் நுரையீரலுடன் இணைப்பு கொண்டுள்ளது.
இது சுவாசக் கோளாறுகளை போக்கவல்லது.
மேலும்
நரம்பு மண்டலம், தசைகளுக்கு வலிமை அளிக்கிறது.
இதனால்இ உங்கள் உடற்சக்தி மேம்படும்.

**சிறுவிரல்....**
சிறுவிரலுக்கு அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது
இதயம் மற்றும் இரத்த ஓட்டத்திற்கு நல்லது.
இது இரத்த ஓட்டத்தை சீராக்கி இதர உடல் பாகங்களின் செயற்திறனை ஊக்குவிக்கிறது.
மேலும் இது மூளையின் செயல்திறனையும் மேம்படுத்துகிறது
இதனால் உங்கள் எண்ணம், சிந்தனை, கவனம் போன்றவையும் மேம்படும்.

**உள்ளங்கை...**
மன அழுத்தம் தான் அனைவருக்கும் ஏற்படும் கொடிய நோய்.
இது ஒட்டுமொத்தமாக மனதையும், உடலையும் பாதிக்கக் கூடியது.
உள்ளங்கையில் அழுத்தம் கொடுத்து பயிற்சி செய்வது
நேர்மறை எண்ணங்கள் அதிகரிக்க உதவுகிறது.
மேலும்
இது உடல் மற்றும் மனதில் ஏற்படும் சோர்வில் இருந்து
விரைவாக விடுபட்டு வெளிவரவும் பயனளிக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.
நாளும் தவறாமல் இப் பயிற்சியை செய்து நலம் பெறுக.

நன்றி உறவுகளே... என்றும் உங்கள் அன்பு சகோதரன்

**ஜே. அன்புரோஸ்**
நலநெறியாளன்
தொடர்பு எண் : **9360456063**